**சுருக்கம்**

பணியமைப்பு – நகராட்சி நிர்வாகம் – நகராட்சிகளுடன் இணைக்கப்பட்ட ஊராட்சிகளின் 25 ஊராட்சி செயலாளர்களை அந்தந்த நகராட்சிகளில் பதிவுரு எழுத்தர்களாக ஈர்த்துக் கொள்வது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.140** **நாள்.29.10.2019**

**படிக்கப்பட்டன:**

1. அரசாணை (நிலை) எண்.29, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.02.2013.
2. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் வழக்கு எண்.8515/2014–ன் மீதான தீர்ப்பு, நாள் 24.05.2014.
3. அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந5) துறை, நாள் 05.12.2014.
4. தமிழ்நாடு நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சி செயலாளர்கள் மற்றும் பணியாளர்கள் சங்க கடிதம் நாள் 15.12.2014 மற்றும் 30.10.2018.
5. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.2934/2012/மாநஅ1, நாள் 11.05.2016, 06.12.2018 மற்றும் 01.02.2019.

*****

**ஆணை:–**

மதுரை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஈரோடு, வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகள் மற்றும் திருப்பத்தூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கரூர், நாமக்கல், புதுக்கோட்டை, ஒசூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய நகராட்சிகளின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட போது பல கிராம ஊராட்சிகள் அந்தந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்பட்டன. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 8 நகராட்சிகளுடன் இணைக்கப்பட்ட ஊராட்சிகளில் பணிபுரிந்து வந்த 25 ஊராட்சி செயலாளர்களை, அந்தந்த நகராட்சிகளில் அதே ஊதிய விகிதத்தில் ஈர்த்துக் கொள்ளப்பட்டு, அரசின் மறு உத்தரவு வரும் வரை பணிபுரிய ஆணையிடப்பட்டுள்ளது.

2. இந்நிலையில், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்பட்ட 39 ஊராட்சி செயலாளர்கள், தங்களை அந்தந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்பட்ட நாளான 25.10.2011 முதல் இளநிலை உதவியாளர் / வருவாய் உதவியாளர் பணியிடத்திற்கான ஊதியத்தை வழங்கிடக் கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.8515/2014–னை தொடர்ந்தனர். மேற்படி வழக்கு எண்.8515/2014–ற்கு சென்னை

உயர்நீதிமன்ற மதுரை கிளை மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தீர்ப்பில் கீழ்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது:-

Xxxx xxxx xxxx

6. In view of the that, the petitioners are directed to give fresh representation giving all the details to the first respondent and on such reception of representation from the petitioners, the first respondent is directed to pass appropriate order within a period of 12 weeks from the date of receipt of a copy of this order. While considering the claim of the petitioners, the first respondent is directed to consider the orders passed by this court in W.P.No.24513 of 2001, dated 25.04.2003 and W.P.No.19693 of 2004, dated 10.04.2006, in the light of the G.O(Ms) No. 178. Municipal Administration and Water Supply Department, dated 29.09.2009.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மதுரை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஈரோடு, வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளுடன் இணைக்கப்பட்ட ஊராட்சிகளில் பணியாற்றிய 35 ஊராட்சி செயலாளர்களுக்கு மட்டும் அந்தந்த மாநகராட்சிகளில் ஈர்த்துக் கொள்ளும் வகையில் 35 உள்ளாட்சி பணியிடம் (Body constituted posts) அதே ஊதிய விகிதத்தில் தோற்றுவிக்கப்பட்டு, 3 ஆண்டுகள் பதிவறை எழுத்தர் பயிற்சி அளித்து ஈர்த்துக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

4. நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பினை, நகராட்சிகளுடன் இணைக்கப்பட்ட ஊராட்சிகளின், ஊராட்சி செயலாளர்களுக்கும் நடைமுறைப்படுத்தும் வகையில் திருப்பத்தூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கரூர், நாமக்கல், புதுக்கோட்டை, ஒசூர், மற்றும் நாகர்கோவில் ஆகிய 8 நகராட்சிகளில் இணைக்கப்பட்ட ஊராட்சிகளின், 25 ஊராட்சி செயலாளர்கள் அனைவரும் 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதாலும், ஊராட்சி துறையில் 15 ஆண்டுகளும் மற்றும் நகராட்சி துறையில் 7 ஆண்டுகளும் என மொத்தம் 22 ஆண்டுகள் இவர்கள் எவ்வித பதவி உயர்வுமின்றி பணிபுரிந்து வருவதாலும், இவர்கள் அனைவரும் சம்மந்தப்பட்ட நகராட்சிகளில் இளநிலை உதவியாளர் / வருவாய் உதவியாளர் பணியிடத்திலேயே பணிபுரிந்து வருவதாலும், ஊரகவளர்ச்சித் துறையில் தனியர்களின் பெயர்கள் பணிமூப்பு பட்டியலிலிருந்து தற்போது நீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், மேலும், இவர்களுடன் பணியாற்றிய ஊராட்சி செயலாளர்கள் தற்போது ஊரக வளர்ச்சித் துறையில் இளநிலை உதவியாளர் தரத்தில் பதவி உயர்வு செய்யப்பட்டுவிட்டனர் என்பதாலும், மேலும், இப்பதவி உயர்வினால் ஏற்படும் கூடுதல் செலவினம் சம்பந்தப்பட்ட நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்பதால் அரசுக்கு நிதிச்செலவினம் ஏதுமில்லை என்பதாலும், மாநகராட்சிகளில் இணைக்கப்பட்ட ஊராட்சிகளின், ஊராட்சி செயலாளர்களை அந்தந்த மாநகராட்சிகளில் 3 ஆண்டு காலம் பதிவுரு எழுத்தர் பயிற்சி பெற்று, பதிவுரு எழுத்தராக ஈர்த்து கொள்ள ஆணை வெளியிடப்பட்டதைப் போல், 25 ஊராட்சி செயலாளர்களையும், 05.12.2014 முதல் அந்தந்த நகராட்சிகளில் பதிவுரு எழுத்தராக பணப்பயனின்றி கருத்தியலாக ஈர்த்துக்கொண்டு நியமனம் செய்து, அதனடிப்படையில், தமிழ்நாடு நகராட்சி பணியாளர் பணியமைப்பு விதிகள் 1970–ன் விதி 3-ன்படி இவர்களை அடிப்படை பணியாளர்களாக கருதி, நகராட்சிகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் / வருவாய் உதவியாளர் பணியிடத்தில் சிறப்பினமாக கருதி பதவி உயர்வு வழங்கிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் தீர்ப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப்பின், கீழ்க்கண்ட 25 ஊராட்சி செயலர்களை, அந்தந்த நகராட்சிகளில் ஆணை வெளியிடப்படும் நாள் முதல் பதிவுரு எழுத்தராக பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஈர்த்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது:–

| Sl. No. | Name of the Municipality/ Municipal Corporation | Total | Name of the Panchayat Secretary |
|---|---|---|---|
| 1. | Tirupattur | 1 | V.Sivakumar |
| 2. | Kancheepuram | 2 | B.Ashokkumar |
| | | 3 | B.Kuttiappan |
| 3. | Villupuram | 4 | S.Selvakumar |
| | | 5 | V.Gnanaprakash |
| | | 6 | K.Senthil Sabarinathan |
| | | 7 | D.Kaliyamoorthy |
| | | 8 | V.Govindan |
| 4. | Karur | 9 | V.Saravanan |
| 5. | Namakkal | 10 | M.Hari Kannan |
| | | 11 | M.Varadharasu |
| | | 12 | B.Maduariveeran |
| | | 13 | S.Kulandhai Vadivel |
| | | 14 | K.Gunasekaran |
| | | 15 | S.Kuppusamy |
| | | 16 | C.Manimannan |
| | | 17 | M.Nandakumar |
| | | 18 | K.S.Selvaraj |
| 6. | Pudukottai | 19 | A.Pandidaniel |
| 7. | Hosur (Now Municipal Corporation) | 20 | K.Velu |
| | | 21 | S.Kumar |
| | | 22 | N.Rajini |
| 8. | Nagercoil (Now Municipal Corporation) | 23 | H.Nagarajan |
| | | 24 | P.Murugan |
| | | 25 | B.Sujeeth |

(i) மேற்கண்ட 6 நகராட்சிகள் மற்றும் 2 மாநகராட்சிகளில், 25 ஊராட்சி செயலர்களை ஈர்த்துக் கொள்ளும் வகையில் (25 Body Constituted Post with pay protection) அவர்கள் ஏற்கனவே பெற்றுவரும் ஊதியம் பாதிக்காத வகையில் பணியிடங்கள் உருவாக்கலாம்.

(ii) இந்த பணியிடங்களில் உள்ள பணியாளர்களின் வயது முதிர்வு, பதவிஉயர்வு, இடமாற்றம் மற்றும் இறப்பு போன்ற நேர்வுகளில் இப்பணியிடங்கள் தானாகவே காலாவதியானதாக கருதப்படும்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.53501/ நிதி(நநிகுவ)துறை /2019, நாள் 25.10.2019 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 028.
சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.
(நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக).
சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள்.
(நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக).
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, நந்தனம், சென்னை – 600 035.

**நகல்:-**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்ட செயலாக்கம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
தமிழ்நாடு நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சி செயலாளர்கள் மற்றும் பணியாளர்கள் சங்கம், நெ.4/490, அன்னைபுரம், சக்தி இல்லம், ப.உ.ச.நகர், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

29/10/2019

**பிரிவு அலுவலர்**

29/10/19